# வகுப்பு - 8 - வரலாறு, 4. மக்களின் புரட்சி

**பயிற்சி வினாக்கள்:**

1. பிளாசிப்போர் நடைபெற்ற ஆண்டு ______.

(1) **1764** (2) **1757** (3) **1857** (4) **1799**

2. ஆங்கிலேயரை எதிர்த்த முதல் இந்திய மன்னன் ______.

(1) தீரன் சின்னமலை (2) மருது சகோதரர்கள்

(3) கட்டபொம்மன் (4) பூலித்தேவன்

3. விஸ்வநாத நாயக்கரின் ஆட்சிப்பகுதி ______ பாளையங்களாகப் பிரிக்கப்பட்டது.

(1) 72 (2) 73 (3) 71 (4) 70

4. தமிழ்நாட்டு அரசியலில் பாளையக்காரர்களின் காலம் ______ நூற்றாண்டு.

(1) 16 மற்றும் 17 (2) 15 மற்றும் 16

(3) 17 மற்றும் 18 (4) 18 மற்றும் 19

5. கர்நாடக உடன்படிக்கை நடைபெற்ற ஆண்டு ______.

(1) 1792 (2) 1793 (3) 1791 (4) 1794

6. வீரபாண்டிய கட்டபொம்மன் ஆட்சி செய்த பகுதி ______.

(1) திருநெல்வேலி (2) அந்தநல்லூர்

(3) பாஞ்சாலங்குறிச்சி (4) செவல்

7. கட்டபொம்மனுக்கும், ஆங்கிலேயருக்கும் இடையேயான மோதலுக்கு முதன்மைக் காரணம்?

(1) பஞ்சம் (2) கப்பம் (3) இராணுவச் செலவு (4) கிளர்ச்சி

8. பாளைக்காரர் முறை ஏற்படுத்தப்பட்ட ஆண்டு ______.

(1) 1520 (2) 1525 (3) 1527 (4) 1529

LIVEWORKSHEETS

9. காலின் ஜாக்சன் எந்த மாவட்டத்தின் ஆட்சியாளராக இருந்தார்?

(1) சென்னை (2) மதுரை (3) திருச்சி (4) இராமநாதபுரம்

10. கட்டபொம்மனின் அமைச்சர் _______ ஆவார்.

(1) யூசுப்கான் (2) கிருஷ்ணப்ப நாயக்கர்

(3) சிவசுப்பிரமணியம் (4) கோபால நாயக்கர்

11. கட்டபொம்மன் தப்பிக்க உதவி செய்தவர் _______.

(1) மருது சகோதரர்கள் (2) ஊமைத்துரை

(3) தீரன் சின்னமலை (4) பூலித்தேவன்

12. _______ ஆங்கிலேயக் கம்பெனிக்குக் கப்பம் கட்டுபவர்களாக இருந்தனர்.

(1) சிவகிரி பாளையக்காரர்கள் (2) கிழக்கு பாளையக்காரர்கள்

(3) சிவகங்கை பாளையக்காரர்கள் (4) மேற்கு பாளையக்காரர்கள்

13. கட்டபொம்மனைக் கைது செய்த மன்னன் _______.

(1) சிவசுப்பிரமணியம் (2) தொண்டைமான்

(3) ஜாக்சன் (4) லூஷிங்டன்

14. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடம் _______.

(1) சிவகங்கை (2) கயத்தாறு

(3) பாஞ்சாலங்குறிச்சி (4) திருநெல்வேலி

15. கட்டபொம்மனின் முன்னோர்கள் _______ பகுதியைச் சார்ந்தவர்கள்.

(1) தமிழ்நாடு (2) கர்நாடகா (3) புதுச்சேரி (4) ஆந்திரா

16. வேலுநாச்சியார் ஆட்சி செய்த பகுதி எது?

(1) விருப்பாச்சி (2) சிவகிரி (3) திண்டுக்கல் (4) சிவகங்கை

17. தற்கொலைப்படைத் தாக்குதலை நடத்திய வேலுநாச்சியாரின் படைத்தளபதி

(1) மங்கை (2) வெள்ளச்சி (3) குயிலி (4) ராணி

LIVEWORKSHEETS

18. வேலுநாச்சியாருக்கு உதவி செய்தவர் ______.

(1) பூலித்தேவன் (2) மருது சகோதரர்கள்

(3) தீரன் சின்னமலை (4) ஊமைத்துரை

19. தென்னிந்தியாவின் ஜான்சிராணி என்று அழைக்கப்பட்டவர் ______.

(1) குயிலி (2) மங்கை (3) வெள்ளச்சி (4) வேலு நாச்சியார்

20. ______ ஆம் வயதில் வேலு நாச்சியார் திருமணம் செய்து கொண்டார்.

(1) 16 (2) 15 (3) 17 (4) 18

21. சிவகங்கையின் சிங்கம் என்று அழைக்கப்பட்டவர் யார்?

(1) சின்ன மருது (2) பெரிய மருது

(3) வேலு நாச்சியார் (4) கோபால நாயக்கர்

22. ______ தலைமையில் ஆங்கிலேயப் படைகள் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைக் கைப்பற்றியது.

(1) ஜாக்சன் (2) அக்னியூ (3) மெக்காலே (4) எட்வர்டு

23. செவத்தையாவின் சகோதரர் ______ ஆவார்.

(1) தீரன் சின்னமலை (2) கட்டபொம்மன்

(3) பூலித்தேவன் (4) பெரியமருது

24. பெரும் கலகத்தின் விளைவாக இராணுவம் பின்பற்றிய கொள்கை

(அ) பிரித்தல் (ஆ) நீலநீர்க்கொள்கை

(இ) வாரிசு இழப்புக் கொள்கை (ஈ) எதிர்த் தாக்குதல்

(1) அ, ஆ (2) அ, இ (3) ஈ, இ (4) அ, ஈ

25. திருச்சிராப்பள்ளிப் பிரகடனத்தை வெளியிட்டவர் ______.

(1) புலித்தேவன் (2) மருது சகோதரர்கள்

(3) தீரன் சின்னமலை (4) கட்டபொம்மன்

LIVEWORKSHEETS

26. சின்ன மருது ஆங்கிலப் படைக்கு எதிராக ______ வீரர்களை திரட்டினார்.

(1) 23000 (2) 22000 (3) 20000 (4) 25000

27. மருது சகோதரர்கள் தூக்கிலிடப்பட்ட இடம் ______.

(1) திருப்பத்தூர் (2) திருச்சி

(3) பாஞ்சாலங்குறிச்சி (4) திண்டுக்கல்

28. ______ என்பவரின் இயற்பெயர் தீர்த்தகிரி.

(1) சின்ன மருது (2) பெரியமருது

(3) ஊமைத்துரை (4) தீரன் சின்னமலை

29. தீரன் சின்னமலை தங்கி இருந்த இடம் ______.

(1) செவ்வயல் (2) விருப்பாச்சி

(3) ஓடாநிலை (4) அரச்சலூர்

30. கொரில்லாப் போர் முறையில் போரிட்டவர் ______.

(1) கட்டபொம்மன் (2) ஊமைத்துரை

(3) மருது சகோதரர்கள் (4) தீரன்சின்னமலை

31. தீரன் சின்னமலை தூக்கிலிடப்பட்ட இடம் ______.

(1) சங்ககிரி (2) திருப்பத்தூர்

(3) ஓடாநிலை (4) கோயம்புத்தூர்

32. தென்னிந்தியக் கிளர்ச்சியாளர்களின் சந்திப்பு மையமாக திகழ்ந்தது ______.

(1) சங்ககிரி கோட்டை (2) வேலூர் கோட்டை

(3) திருச்சி மலைக்கோட்டை (4) சதுரகிரி கோட்டை

33. திப்புவின் மூத்த மகன் ______.

(1) பதே ஹைதர் (2) ஹைதர் அலி (3) கர்னல் (4) சவார்க்கர்

34. ______ சின்னம் திப்புவின் கொடியில் இருந்தது.

LIVEWORKSHEETS

(1) மீன் (2) புலி (3) வில் (4) சேவல்

35. 1806 - ல் நடைபெற்ற வேலூர் கலகத்தை "முதல் இந்திய சுதந்திரப் போரின் முன்னோடி" என்று கூறியவர் ______.

(1) கில்லெஸ்பி (2) வில்லியம் (3) காவெண்டிஷ் (4) சவார்க்கர்

LIVEWORKSHEETS